**ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ்** ISSN NO.2581-5938
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-2, இதழ்-2, சூன் 2019

# இலங்கை காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய குளிர்ச்சிச் சடங்கு மரபுகளும், குளிர்ச்சிப் பாடல்களின் இசை நுட்பங்களும்

**தங்கராசாகோபிநாத்**

முதுநுண் கலைமாணி (குரலிசை),
சித்தானைக்குட்டிபுரம், காரைதீவு-03, அம்பாரை மாவட்டம், இலங்கை.

**முன்னுரை**

இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்குரிய தனித்துவமான சிறப்பம்சங்களில் கண்ணகி அம்மன் சடங்குகளும் அடங்கும். கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து**த்** தமிழ் கிராமங்களிலும் கண்ணகி அம்மன் கோயில்கள் காணப்படுகின்றன. கண்ணகி அம்மனை**க்** குலதெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் வழிபடும் மரபு காணப்படுகின்ற**து**. பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மன் குடிகொண்டுள்ள காரைதீவு கிராமத்தில் கண்ணகி அம்மன் கோயில் குளிர்ச்சி**ச்** சடங்கு மரபுகளையும், அத்துடன் குளிர்ச்சிப் பாடல்களின் இசைநுட்பங்களையும் ஆராய்வதனை நோக்காகக் இவ் **ஆ**ய்வுக்கட்டுரை விபரண ஆய்வுமுறையியலில் எழுதப்பட்டுள்ளது.

**காரைதீவு கிராமத்தின் கண்ணகி அம்மன் ஆலய வரலாறு**



சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை அமைத்து சேரநாட்டுத் தலைநகரமாம் **வ**ஞ்சி மாநகரில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் பிரதிட்டை செய்து பெருவிழா எடுத்தான். கி.பி.12ஆம் நூற்றாண்டில் இவ்விழாவிற்கு இலங்கை மன்னன் க**யவா**கு செங்குட்டுவனின் அழைப்பின் நிமித்தம் சென்றான். பின்பு க**யவா**கு மன்னனின் அழைப்பினால் சேரன் செங்குட்டுவனின் வழிவந்த சேனாதிராசனின் மகளான தேவந்தி அம்மையார் தனது மகள் சின்னநாச்சியாருடன் இலங்கையில் முருகன் குடிகொண்டுள்ள கதிர்காம ஆலயத்திற்கு**ப்** பாதயாத்திரை மேற்கொள்ள க**யவா**குவின் விருந்தினராகத் தங்கியிருந்து பாதயாத்திரை மேற்கொண்டனர். அம்மையார் தான் இலங்கை வரும்போது கண்ணகிஅம்மனின் சிலையைக் கொண்டு வந்ததாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.




அம்மையாரின் பாதயாத்திரையின் வழியில் எமது பழம்பெரும் கிராமமான காரேறு மூதூர் (காரைதீவு) காணப்பட்டது. **இ**ங்கு அம்மையார் வந்து தங்கியிருந்தார். பின்னர் கண்ணகி அம்மன் பேரருள் இப்பழம்பெரும் கிராமத்தின் மீது பதிந்த காரணத்தினால் தேவந்தி அம்மையார் இத் தமிழ்க் கிராமத்தால் ஈர்க்கப்பட்டு நிரந்தரமாகவே தங்கியிருந்து வேம்புமர நிழலில் தான் கொண்டு வந்த பத்தினித் தெய்வத்தின் விக்கிரகத்தை சிறு ஆலயம் அமைத்து பிரதிட்டை செய்து பூசைகள் **செய்து வழிபட்டார்**. (காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய மகாகும்பாபிஷேக சிறப்புமலர், பக்**கம்** 24) **என அறியமுடிகின்றது**.

**திருக்குளிர்ச்சி/வைகாசிப் பொங்கல்**

காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் திருக்குளிர்ச்சி இடம் பெறுவதன் வரலாற்றுப் பின்னணியை நோக்கும்போது தேவந்தி அம்**மையா**ரின் மகளான சின்னநாச்சியார் அழகின் மீது மையல் கொண்ட முக்குவ குடிவழி இளைஞர்கள் அம்மையாருக்கும், இளவரசி சின்னநாச்சியாருக்கும் மிகவும் தொந்தரவு கொடுக்க, வெறுப்புண்ட அம்மையார் பத்தினி தெய்வத்தின் சிலையினை எடுத்துக் கொண்டு மகளுடன் காரைதீவு கிராமத்தில் இருந்து 'தம்பிலுவில்' எனும் தமிழ் கிராமத்தில் அம்மன் சிலையை பிரதிட்டை செய்து வழிபட்டார். பத்தினி தெய்வத்தின் சிலை இடம்பெயர்ந்த பின்பு காரைதீவில் கொள்ளைநோய், அம்மைநோய் என்பன மக்களை வாட்டின. இதனால் காரைதீவு மக்கள் தம்பிலுவில் கிராமத்திற்குச் சென்று தேவந்தி அம்மையாரிடம் நிகழ்ந்ததனைக் கூறி மன்னிப்புக் கேட்டு மீண்டும் காரைதீவுக்கு அழைத்து வந்தனர். மற்றும் பத்தினித் தெய்வத்தை மீண்டும் காரைதீவில் பிரதிட்டை செய்தனர். அம்மையாரின் வேண்டுகோளின் பெயரில் கற்புக்கரசி கண்ணகியை**க்** குளிர்விக்கும் பொருட்டு பொங்கலிட்டு**ப்** பெருவிழா எடுத்தனர். இப்பெருவிழாவில் கொம்பு முறித்தல், போர்த்தேங்காய் உடைத்தல், கொம்புத்தட்டு, வசந்தன் கூத்துக்கள் என்பன இடம்பெற்றன. இப்பெருவிழா வருடாவருடம் வைகாசி விசாகத்தில் (வைகாசி**த்** திங்கள்) கொண்டாடப்படும். இதனை**த்** தற்காலத்தில் வைகாசி திருக்குளிர்ச்சி என அழைப்பர். (காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய மகாகும்பாபிஷேக சிறப்புமலர், பக்**கம்**.25).

**வைகாசிக் குளிர்ச்சிச் சடங்கின் மரபுகள்**

இலங்கையில் காணப்படும் கண்ணகி அம்மன் ஆலயங்களில் இடம்பெறும் திருக்குளிர்ச்சி விழா, தமிழ் மாத வைகாசிப் பௌர்ணமியில் இடம்பெறும். ஆயினும் காரேறு மூதூரிலும், யாழ்ப்பாணம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலிலும் திருக்குளிர்ச்சி வைகாசிப் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கட்கிழமை இடம்பெறுவது மரபாகும். திருக்குளிர்ச்சி விழா நடைபெறும் திங்கட்கிழமைக்கு முன் வாரத் திங்கட்கிழமையன்று "சமுத்திரதீர்த்தம்" எடுத்துவரப்பட்டு, ஆலயத்தில் "கல்யாணக்கால்" நாட்டப்படும். சமுத்திரத்திலே தீர்த்தம் எடுத்து வரும்பொழுது ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட மெய்யன்பர் ஒருவரின் காணியில் பூவரசு மரத்தின் நேரான கிளையொன்றைப் பக்தர்களின் கைகளினால் முறித்து, அதனை சமுத்திர தீர்த்தத்துடன் ஆலயத்திற்கு எடுத்துச் சென்று பத்தினி தெய்வத்திற்கு முன்பாக பூவரசு மரக்கிளையை நட்டு கப்புகன்மார்களால் (பூசகர்) பூசைகள் செய்யப்பட்டு அன்றைய நிகழ்வுகள் நிறைவடையும். இரண்டாம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு கல்யாணகாலிற்கும், அம்பாளுக்கும் பூசைகள் நடைபெற்றபின்னர் உடுக்கை அடித்து "ஊர் சுற்றுக் காவியம்" பாடப்படும். இத்துடன் அன்றைய நிகழ்வுகள் நிறைவுபெறும். மூன்றாம் நாள் புதன் கிழமை தொடக்கம் **ஞா**யிறு வரை பகல் ஒரு மணிக்கும், மாலை 7 மணிக்கும் அம்பாளுக்கும் பூசையும் தொடர்ந்து உடுக்கை அடித்து ஊர் சுற்றுக்காவியம் பாடுதலுடன் 5 நாட்களின் நிகழ்வுகள் இடம்பெறும். அடுத்தநாளான திங்கட்கிழமை முழுநாளும் பூசைகள் இடம்பெறுவதில்லை. அன்றையதினம் முழுநாளும் "சிலப்பதிகாரக் காதை" பாடப்படும்.



மேலும் அடுத்துவரும் செவ்வாய்க்கிழமை உதயம் 4 மணிக்கு கண்ணகி அம்மனைக் குளிரவைப்பதற்கான நிகழ்வுகள் இடம்பெறும். இறுதியில் குளிர்ச்சிப் பாடல்கள் பாடிமற்றும் மங்கள கீதம் பாடி குளிர்ச்சிப்பூசைகள் முடிவுக்கு வரும். இதனைத் தொடர்ந்து வைகாசிக் குளிர்ச்சி நிறைவடைந்து எட்டாம் நாளான அடுத்துவரும் திங்கட்கிழமை அம்பாளின் எட்டாம் சடங்கு இடம்பெறும். இதன்போது கிராம மக்கள் குடும்பம் குடும்பமாக**ப்** பொங்கல் இடுவர். (ஜெயநாதன், காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய மகாகும்பாபிஷேக சிறப்பு மலர், பக்கங்கள் 26-27)

**குளிர்ச்சிப் பாடல்களின் இசைநுட்பங்கள்**

சடங்குகளில் பாடப்படும் பாடல்கள் அனைத்தும் செவி வழி கேட்டல் மூலம் உணர்ந்து பாடப்படுகின்ற பாடல்கள் ஆகும். இசை தமிழ்மக்கள் மத்தியில் சமயச்சடங்கின் ஒரு பகுதியாக**க்** காணப்படுகின்றது. இசைப்பாரம்பரிய**ம்** நாட்டார் இசைமரபு சார்ந்ததாக**க்** காணப்படுகின்றது. இம்மரபில் கேள்வி ஞானம் மூலம் கற்றோரே அதிகம் பாடுவர். இவ் இசைநுட்பங்களை**ப்** புரிந்துகொள்ள வேண்டுமாயின் சடங்கு**ப்** பாடல்களில் முழுமையாக**த்** தெளிவு அடைய **வேண்டும்**. சடங்கின் ஊடாக இசைமரபை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. தெய்வமாடலுடன் இணைந்ததாகப் பாடப்படும் இசைப்பாடல்கள்

2. தனி நிகழ்வாக இடம்பெறும் இசை நிகழ்த்துகை

உடுக்கடித்துப் பாடல்களைப் பாட அப்பாடலுக்கு ஏற்றதாகத் தெய்வமாடும் முறை**ச்**சடங்குக் கோயில்களில் காணப்படுகின்றது. இச்சந்தர்ப்பங்களில் பாடப்படும் பாடல்கள் தாலாட்டுப்பாடல்கள் எனலாம். மற்றும் தனிநிகழ்வாக இடம்பெறும் இசைநிகழ்த்துகை, கண்ணகி கோயிலில் இடம்பெறும் குளிர்ச்சிப்பாடல்கள், மற்றும் வழக்குரை, ஏனைய கோயில்களில் பாடப்படும் காவியம் எனலாம் (கிருஷ்ண ராஜா சர்மிளா, காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் சடங்கு இசை ஓர் ஆய்வு, பக்கம் 34).

சடங்கு இடம்பெறும் பொழுது பகல், இரவு பூசை நேரங்களில் அம்மன் காவியம், உடுக்குச்சிந்து என்பன பாடப்படும். பாடும் பொழுது சிலம்பு, அம்மானைக்காய், உடுக்கு போன்ற இசைக்கருவிகள் என்பன இசைக்கப்படும். (கிருஷ்ண ராஜா சர்மிளா, காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் சடங்கு இசை ஓர் ஆய்வு, பக்**கம்** 32).

சடங்கில் பாடப்படும் இசைவடிவங்களைக் காவியம், அகவல், தோத்திரம், கும்மி, தாலாட்டு, ஊஞ்சல், ஒப்பாரி, அம்மானை, சிந்து என வகைப்படுத்தலாம். சடங்கில் பாடப்படும் பாடல்கள் அனைத்தும் செப்பேடுகளிலும், ஓலைச்சுவடிகளிலும் எழுதப்பட்டு**ப்** பேணப்பட்டன. பின்பு இவ்வேட்டுப் பிரதிகள் தொகுப்பாக "மகா மாரித்தேவி திவ்யகரணி" என்ற **நூலாக** வெளிவந்தது. (கிருஷ்ண ராஜா சர்மிளா, காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் சடங்கு இசைஓர் ஆய்வு, பக்கம் 35)

**முடிவுரை**

இலங்கையில் வாழும் தமிழ் மக்க**ளிடையே** கிழக்கு மாகாணத்தில் தான் கண்ணகி அம்மன் வழிபாடும், சடங்கு வழிபாட்டு முறைமைகளும் அதிகமாகப் பின்பற்றப்படுகின்றன எனலாம். காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் பழமை மிக்கது. இந்திய அரசபரம்பரையைச் சேர்ந்தவர்களால் கண்ணகி வழிபாட்டு முறைகள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதிலிருந்து தமிழ்நாட்டிற்கும், இலங்கைக்கும் இடையே கலாசாரத் தொடர்புகள் காணப்பட்டுள்ளன. என்பதனை அறிய**முடிகின்றது**. மற்றும் கண்ணகி அம்மன் வழிபாடு ஆகமம் சாராமலும் காணப்படுகின்றது. இவ் ஆலயத்தில் புதிய ஆலயம் ஆகமம் சார்ந்தும், பழைய ஆலயம் ஆகமம் சாராமலும் காணப்படுகின்றமை தனிச்சிறப்பு மிக்கது எனலாம். இச்சடங்கு முறைமைகளில் பல காவியங்கள் பாடப்படுகின்றன. **சி**ல காவியங்கள் ஊருக்கு ஊர் வேறுபடுகின்றன. இவை பாடப்படுகின்ற மரபானது கேள்வி ஞானம் மூலம் கேட்டு, கற்று அதனைப் பாடுகின்றனர் எனலாம். அத்துடன் உடுக்கு, சிலம்பு, அம்மானைக்காய் போன்ற இசைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொகுத்து நோக்குகின்றபோது கண்ணகி அம்மன் ஆலய சடங்கு வழிபாட்டில் நாட்டாரியல் இசை, இசைக்கருவிகள், வசந்தன் கூத்து என**ப்** பல கலை, கலாச்சார அம்சங்களை உள்ளடக்கி**க்** காணப்படுவது எமது தொன்றுதொட்டு வரும் கலை, கலாச்சார விடயங்களை பேணவும், எதிர்காலத்தில் தமிழனது கலை, கலாச்சார விடயங்களை**ப்** பேண**ச்** சடங்குமுறைகள் உறுதுணையாக உள்ளன என்று**ம் கூறமுடிகின்றது**.

## SRILANKA KAARAI ISLAND KANNAGI AMMAN TEMPLE'S COOLING CEREMONY, CUSTOMS, SONGS AND MINUTE MUSIC TACTICS

**Thangarasa gopinath**

Srilanka's East districts' unique special features includes the Kannagi Amman ceremonies. All the Tamil villages in East districts built this Kannagi Amman temple. They are considering Kannagi Amman as their own God and guarding angel. The worshipping customs are also in practice. Chastised god Kannagi Amman swells in Kaarai Island's village and this research's insight of telling the cooling ceremony, customs and all the minute music tactics are also put to test and analysed in varied perception.